| | | | |
|---|---|---|---|
| (இ) | பல்லம நூலகத்தின் கட்டிடத்தின் முன் வேலியை அமைப்பதற்காக ஒப்பந்தக் காரருக்குச் செலுத்த வேண்டிய ரூபா 125,767 ஆன நிறுத்தி வைத்தல் தொகை கடன் கொடுத்தோர் மற்றும் வைப்புக் கணக்காக இரண்டு கணக்குகளில் செலவு வைக்கப்பட்டிருந்தன. | | |
| (ஈ) | 2019 ஆம் ஆண்டின் அடம்மதவத்த காணி அபிவிருத்தி செய்யும் போது பொது நடவடிக்கைகளுக்காக பிரதேச சபைக்கு உரித்தான ரூபா 100,000 பெறுமதியான 02 ரூட் 36.76 பேர்ச் அளவிலான காணி நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. . | 2022 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் சரி செய்யப்படுமென | நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 2,930,529 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 1,441,473 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீதவரி<br>மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட 12,918,491 ஆன நிலுவையின் மீதியிலிருந்து 2022 ஆகஸ்ட் 31 இல் உள்ளவாறு அரச துறையின் 36 வரி அலகுகளுக்காக ரூபா 559,396 தொகையும் தனியார் தரப்பினரின் 1875 வரி அலகுகளிற்காக ரூபா 11,388,044 தொகையும் அறவிடப்பட வேண்டியிருந்தது. நகரில் குறைந்த மட்டத்தில் வசதிகள் காணப்பட்டமை மற்றும் திட்டவட்டமான உறுதிகள் தயாரிக்கப்படாமையால் தற்போதைய உரிமையாளர்கள் உறுதிப்படுத்த முடியாமை போன்ற காரணங்களால் அதில் தனியார் துறையின் 582 வரி அலகுகளிலிருந்து ரூபா 3,260,792 அறவிடப்பட முடியாததாக இனங்காணப்பட்டிருந்தது. எஞ்சிய நிலுவை மீதிகளிலிருந்து அரச துறையின் 36 வரி அலகுகளுக்காக ரூபா 559,396 தொகையும் தனியார் துறையின் 1293 வரி அலகுகளுக்காக 8,127,251 தொகையாக இருந்தது. | எதிர்காலத்தில் நிலுவை மீதியை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிய தருகின்றேன் | வருடாந்த பட்டியலிடப்பட்ட வீதவரி, ஏக்கர் வரி மற்றும் வாடகை என்பவற்றை ஆண்டிலேயே அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |

(ஆ) ஏக்கர் வரி

--------------

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 264 வரி அலகுகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 431,855 ஆன ஏக்கர் வரி ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட நபர்கள் மற்றும் இடங்கள் தொடர்பாக குறிப்பிடப்பட்ட தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியாமை காரணமாக அறவிட முடியாதிருந்தது. | வருமானப் பரிசோதக உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டு ஏக்கர் வரி தொடர்பாக முறையான பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டு ஏக்கர் வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். | வருடாந்த பட்டியலிடப்பட்ட வீதவரி, ஏக்கர் வரி மற்றும் வாடகை என்பவற்றை ஆண்டிலேயே அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும |